CRLMP: 621/2024
நாள்: 14 .11.2024
சாட்சி–2
பெயர்: ராமசாமி
த/பெ : சாமியய்யா
வயது : 60
ஊர் : ராப்பூசல்

**ராமசாமியாகிய நான் சத்தியபிரமாணத்தில் பேரின் கூறும் வாக்குமூலம் என்ன வென்றால்**

சாட்சி செந்தில்குமார் எனக்கு நண்பர் ஆவார். அவருக்கும் , அவரது மனைவிக்கும் அடிக்கடி குடும்ப பிரச்சனை ஏற்படும். அடிக்கடி நான் பஞ்சாயத்து பேசுவதற்கு செல்வேன். கடநத் 07.07.2024 அன்று மாலை 5.00 மணிக்கு மேல் நான மருதம்பட்டியில் உள்ள செந்தில் குமார் சென்று கொண்டிருந்த போது செந்தில் குமார் மனைவின் உறவினர்கள் சுமார் 7,8 நபர்கள் குச்சி மற்றும் கம்பால் செந்தில் குமாரை அடித்து கொண்டிருந்தார்கள். அதனால் அவருககு தலையில் காயம் ஏற்பட்டது. அவரை 108 ஆம்புலன்சில் ஏற்றி மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள்.

CRLMP: 621/2024
நாள்: 14 .11.2024
சாட்சி–3
பெயர்: ராணி
த/பெ : மாரியப்பன்
வயது : 54
ஊர் : மருதம்பட்டி

**ராணியாகிய நான் சத்தியபிரமாணத்தில் பேரின் கூறும் வாக்குமூலம் என்ன வென்றால்**

தனது மருமகள் பெயர் சீத்தாலட்சுமி ஆகும். திருச்சி இனாம்குளாத்தூரை சேர்ந்தவர் . எனது மகன் செந்திலுக்கு சீத்தாலெட்சுமியை 3 1/2 வருடங்களுக்கு முன்பு திருமணம் செய்தோம். திருமணத்திற்கு பின்பு 9 நாட்களிலேயே பெண் வீட்டார்கள் 100, 150 பேர்கள் வந்து எனது மகனையும் மருமகளையும் தனிக்குடித்தனம் வைப்பதாக பிரச்சனை செய்தார்கள். பிறகு எனது மருமகள் காரணமில்லாமல் நான்கு, ஐந்து முறை தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்தார். திருமணம் ஆகி 4,5 மாதத்தில் மீண்டும் ஒரு முறை எரும்பு சாப்பீசு சாப்பிட்டு தற்கொலை செய்து கொள்ள முயற்சி செய்துள்ளார். நாங்கள் வரதட்சணை கொடுமை செய்யதாக எங்கள் மீது தீயணைப்பு அனைத்து மகளிர் காவல் நிலையத்தில் புகார் கொடுத்தார்.

2. 07.07.2024 அன்று மாலை 5.30 மணிக்கு மேல் மருதம்பட்டியில் உள்ள எங்களது வீட்டில் நானும் எனது மகனும் இருந்த போது இளங்கோவன், முருகேசன், ஜெகதீஷ், மூக்கன் (எ) காட்டமுத்து, சித்ராதேவி, முத்துலெட்சுமி, சிவா, தெய்வானை சேட்டு (எ) காட்டமுத்து, சீத்தாலட்சுமி ஆகியோர்கள் வந்து எனது மகனை அடித்துகொள்ளுங்கடா என்று சொல்லி குச்சி மற்றும் கம்பு ஆகியவைகளால் எனது மகனை அடித்தார்கள். அதில் எனது மகனுக்கு தலையில் காயம் ஏற்பட்டது. பிறகு 108 ஆம்புலன்சில் இலுப்பூர் அரசு மருத்துவமனைக்கு நான் அழைத்து வந்தேன். பிறகு இலுப்பூர் காவல் நிலையத்தில் எனது மகன் புகார் கொடுத்தார். அதன் பேரில் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.